அறிவிப்புகள்

[திரு. கு. தமிழரசன்]

உறுப்பினர்கள் கூட கையெழுத்திட்டு. உங்களிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறோம். நடந்து முடிந்திருக்கிற உள்ளாட்சித் தேர்தல்கள் செல்லுமா, செல்லாதா. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே சொன்னேன். பெரிய சட்டப்பிரச்சினை இருக்கிறது (குறுக்கீடு). அது வேண்டாம். சபைக் கூட்டம் முடியும் நேரத்தில், மகிழ்ச்சியோடு அமருங்கள் (குறுக்கீடு).

(5) அறிவிப்புகள்.—தொடர்ச்சி.

(ஆ) கூட்டத் தொடரில் நடைபெற்ற அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர்கள் 8–1–1986ஆம் நாளன்று இரு அவை உறுப்பினர்களும் கலந்து கொண்ட கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

8ஆவது சட்ட மன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டம் தொடங்கியதிலிருந்து அதாவது 8–1–1986 முதல் இன்றுவரை பேரவை கூடிய மொத்த நாட்கள் .. .. .. 53 நாட்கள்

மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் .. 8 நாட்கள்.

அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் .. .. 265 மணி 10 நிமிடங்கள்.

ஆளுநர் உரை மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. .. .. 6 நாட்கள்.

பங்குகொண்ட உறுப்பினர்கள் 55

(பிற்பகல் 1-50)

நிதி அலுவல்கள் :

1986–87ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப்பெற்ற நாள் .. 17–3–1986

வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் 8

பங்குகொண்ட உறுப்பினர்கள் 72

அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள். 25

கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். 2,193

அவையுள் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் 165

விவாதித்து நிறைவேற்றப் பெற்ற மானியக் கோரிக்கைகள் 58

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரை 325

வினாக்கள்-விடைகள்:

குறுகிய கால வினாக்கள் 13

உடுக்குறியிட்ட வினாக்கள் 786

உடுக்குறியிடாத வினாக்கள் 950

துணை வினாக்கள் 2,324

இக்கூட்டத் தொடரில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் துணை வினாக்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சைதை சா. துரைசாமி அவர்கள் 109 துணை வினாக்கள் கேட்டிருக்கிறார்கள். திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் 73 துணை வினாக்கள் கேட்டிருக்கிறார்கள்.

கவன ஈர்ப்புகள் :

அனுமதிக்கப் பெற்றவை .. 247
(162 பொருள் பற்றி)

அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை 214
(142 பொருள் பற்றி)

ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்:

பேரவையின் அனுமதி மறுக்கப்பெற்றவை. 25
(5 பொருள் பற்றி)

அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் :

அறிவிப்பு வரப் பெற்றவை	.. ..	7
இசைவு மறுக்கப் பெற்றவை	.. ..	7
உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை.		இல்லை.
உரிமைக் குழுவின் பரிந்துரையையொட்டி எடுக்கப்பெற்ற நடவடிக்கை	..	இல்லை.

அரசினர் சட்ட முன்வடிவுகள் :

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற்றவை.		59
நிறைவேற்றப்பெற்றவை	.. ..	59
நிலுவையில் உள்ளவை	.. .. ..	—

தீர்மானங்கள் :

(அ) அரசினர் தனித் தீர்மானங்கள் வரப் பெற்றவை	.. ..	4
நிறைவேற்றப்பெற்றவை	.. ...	4
நிலுவையில் உள்ளவை ..	.. ..	—
(ஆ) தனியார் தீர்மானங்கள் வரப் பெற்றவை	.. ..	25
அனுமதிக்கப்பெற்றவை	.. ...	21

அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

சட்டமன்றப் பேரவை குழுக்கள் :

	20–7–1985 முதல் 15–5–1986 வரை (1985–86) கூடிய நாட்கள்.	அளித்துள்ள அறிக்கைகள்.
மதிப்பீட்டுக் குழு ..	41	4
பொதுக் கணக்குக் குழு ..	42	24
பொது நிறுவனங்கள் குழு	42	18
உரிமைக் குழு ..	1	..
அலைக் குழு	4	..
அரசு உறுதிமொழிக் குழு	20	2
அலுவல் ஆய்வுக் குழு ..	7	..
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	28	3

காமன்வெல்த் பாராளுமன்றக் குழு (தமிழ்நாடு கிளை) :

கூட்டம் நடைபெற்ற நாட்கள் 5

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் :

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் 259

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் 252

பார்வையாளர்கள் :

மாடத்தில் அனுமதிக்கப்பெற்ற—

ஆண்கள் — 19,246

பெண்கள் — 2,132

அறிவிப்புகள்

[பேரவைத் தலைவர்]

தலைவர் மாடத்தில் அனுமதிக்கப்பெற்றவர்கள் 15,870

பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோர் மொத்த எண்ணிக்கை 37,248

நூலகம் :

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர். 1,648

வழங்கப்பெற்ற நூல்கள் 1,155

நடவடிக்கைக் குறிப்புகள் :

தட்டச்சு செய்யப்பெற்ற மொத்த பக்கங்கள் 11,715

இந்தக் கூட்டத் தொடரில், அரசின் சார்பாக 'குதிரைப் பந்தய ஒழிப்பு' பற்றிய அறிவிப்பும், மற்றும் 'மேலவை நீக்கம்' பற்றிய முக்கிய அரசினர் தனித் தீர்மானமும் குறிப்பிடத் தக்கவை.

மூன்று புதிய குழுக்களை இவ்வாண்டு முதல் நியமித்துள்ளோம். அவையாவன—

(1) மனுக்கள் குழு.

(2) சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

(3) நூலகக் குழு.

பேரவை நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் நடத்திச் செல்ல ஒத்துழைப்புத் தந்த மாண்புமிகு முதல் அமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைமுன்னவர் அவர்களுக்குச் சிறப்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்புகள்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையை நடத்திச் செல்வதில் உதவியாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும், மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மா. சின்னராசு, செ. செம்மலை, சைதை சா. துரைசாமி, டி. ஆர். வேங்கடரமணன், பொன். முத்துராமலிங்கம் ஆகியோருக்கும் என் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எல்லா கட்சித் தலைவர்களுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகள் சீரிய முறையில் நடப்பதற்கு உதவியாக இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் என்னுடைய இதயங்கனிந்த நன்றியோடு பாராட்டுதலையும் வாழ்த்தையும் சேர்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துக் கட்சிகளின் கொறடாக்களுக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறைகள் மற்றும் பத்திரிகைகள், வானொலி, தொலை காட்சி ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

பேரவைச் செயலகத்தின் ஆணையர் மற்றும் செயலர் திரு. சி. கு. இராமசாமி அவர்கள் என்னுடன் மிகவும் ஒத்துழைத்தார். அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவை அலுவலர்கள் அனைவருக்கும், சட்டப் பேரவை பாதுகாப்பு அலுவலர் அனைவருக்கும், பேரவை மூலம் அவர்களின் சீரிய பணிகளுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவையை ஒத்தி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்.''